www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் பருவ தொகுத்தறித் தேர்வு – 2022

8 - ஆம் வகுப்பு

## தமிழ்

பதிவு எண். 8 1 0 2

காலம் : 2.00 மணி மதிப்பெண்கள் : 60

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 10 X 1 = 10

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல்
அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

2. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர்
அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) பாரதியார் ஈ) பெருஞ்சித்திரனார்

3. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள்
அ) இ, ஈ ஆ) உ, ஊ இ) இ, எ, ஏ ஈ) அ, ஆ

4. வானில்கரு ........ தோன்றினால் மழை பொழியும் என்பர்
அ) முகில் ஆ) துகில் இ) வெயில் ஈ) கயல்

5. பயனில்லாத களர் நிலத்திற்கு ஒப்பானவர்கள்
அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்

6. காந்தியடிகள் ............ போற்ற வாழ்ந்தார்
அ) நிலம் ஆ) களம் இ) வையம் ஈ) வானம்

7. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் ............ என்பப்படும்.
அ) முற்று ஆ) எச்சம் இ) வினையெச்சம் ஈ) பெயரெச்சம்

8. உடல் நலம் என்பது ............. இல்லாமல் வாழ்தல் ஆகும்.
அ) அணி ஆ) பிணி இ) பண்ி ஈ) மணி

9. கற்றவருக்கு அழகு தருவது ............ .
அ) தங்கம் ஆ) கல்வி இ) வைரம் ஈ) வெள்ளி

10. எட்டாம் வேற்றுமை .................. வேற்றுமை என்றழைக்கப்படுகிறது
அ) விளி ஆ) செயப்படுபொருள் இ) எழுவாய் ஈ) பயனிலை

**II பொருத்துக.** 4 X 1/2 = 2

11.

| | | | |
|---|---|---|---|
| 1. | இயற்கை ஓவியம் | – | சிந்தாமணி |
| 2. | இயற்கைத் தவம் | – | பெரியபுராணம் |
| 3. | இயற்கைப் பரிமாணம் | – | பத்துப்பாட்டு |
| 4. | இயற்கை அன்பு | – | கம்பராமாயணம் |

**கோடிட்ட இடத்தை நிரப்புக.** 3 X 1 = 3

12. விலங்கொடு ......... அனையர் ........
கற்றாரோடு ஏனை யவர்

13. இருதிணை – எனும் சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது

14. ஓடை + ஆட என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்
அ) ஓடை ஆட ஆ) ஓடையாட இ) ஓடையோட ஈ) ஓடைவாட



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in

III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக. 5 X 2 = 10

15. மோனை, எதுகைச் சொற்களை எழுதுக.
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

16. ஒலி மரபுகளை எழுதுக. அ) ஆடு ................ . ஆ) காகம்................ .

17. கலைச் சொல் தருக. அ) Vowel ............. ஆ) Phoneme ................

18. சொற்றொடரில் அமைத்து எழுதுக. அழகு

19. நிறுத்தற்குறிகள் இட்டு எழுதுக.
குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை ஆகியன ஐந்திணைகள்.

20. தமிழ் எண் உரு தருக. அ) - 20 - ஆ) 36 -

21. 'தக்கார்' .......... எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

IV எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையெழுதுக. 5 X 2 = 10

22. உலகம் எவற்றால் ஆனது?

23. ஓவிய எழுத்து என்றால் என்ன?

24. வினைமுற்று என்றால் என்ன?

25. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?

26. சான்றோர்க்கு அழகாவது எது?

27. யாருடைய உள்ளம் மாணிக்கக்கோயில் போன்றது?

28. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

V எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக. 3 X 3 = 9

29. நாம் தமிழ் மக்கள், நாம் நமது தாய்மொழி வாயிலாகக் கல்வி பெறலே சிறப்பு. அதுவே இயற்கை முறை. போதிய ஓய்வும் நேரமும் வாய்ப்பும் இருப்பின் வேறு பல மொழிகளையும் பயிலலாம். ஆனால் முதல் முதல் தாய்மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும் தாய்நாடு என்னும் பெயர் தாய்மொழியைக் கொண்டே பிறக்கிறது?
1) எம்மொழி வாயிலாக கல்வி பெறல் சிறப்பு?
2) வேறு பல மொழிகளை எப்போது பயிலலாம்?
3) தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?

30. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

31. நோய்கள் பெருகக் காரணம் என்ன?

32. வாழ்க நிரந்தம் ............. எனத் தொடங்கும் மொழிவாழ்த்துப் பாடலை எழுதுக.

VI எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2 X 8 = 16

33. தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

34. வெட்டுக்கிளியும் சருகுமானும் கதையை சுருக்கி எழுதுக.

35. நான் விரும்பும் கவிஞர் - பாரதியார். முன்னுரை - பிறப்பும் இளமையும் - விடுதலை வேட்கை - மொழிபற்று- நாட்டுப்பற்று - முடிவுரை.

36. விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக்கடிதம் எழுதுக.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
CamScanner